பிசுமில்லா கிற்றகுமா னிற்றகீம்.

இ ஃ து.

முகியித்தீன் சதகம்.

கோயமுத்தூர் ஜில்லா-உடுமேலைப்பேட்டை. தாலூகா.

சோளமா தேவிநகரம்.

செய்யிதுமுகம்மதுப் புலவரவர்கள்

குமாரர்

முகம்மதுநாகூர் முத்துப்புலவ

ரவர்களாற் செய்யப்பட்டது.

இதனே[illegible]வுநந்தக்களிப்பும்-பதங்களுஞ்

சேர்ந்திருக்கின்றன.

கண்ணகுமது மகுதூமுகம்மதுப்

புலவ ரவர்களாற் பரிசோதித்து.

சென்னை.

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப் பட்டது.

முதற் பதிப்பு.

ஹிஜிரி-சதஙு களஙல-முஹற்றமீ.

பிசுமில்லா இற்றகுமா னிற்றகீம்.

இஃது

கோயமுத்தூர் ஜில்லா வுடுமலேப்பேட்டைத் தாலூகாவைச்சார்ந்த

சோளமா தேவியென்னும்-நகரத்தில் வசிக்கும்

செய்யிது முகம்மதுப் புலவரவர்கள் குமாரர்

முகம்மதுநாகூர்

முத்துப்புலவரவர்கள் பாடிய

முகியித்தீன் சதகம்.

காப்பு-வெண்பா.

ஆதியிலார் தூத ரண்ணலிற சூல்பேர
ரோதுமுகி யித்தீ னெலிபேரி-லேதமறச்
சாற்றுஞ் சதகமதிற் றப்புவரா தெப்புவியுங்
காத்தளிக்கு மாதியருள் காப்பு.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

ஆதியி லலிப தாகி யதுமுதல் நுக்தாய் நின்று
சோதியின் வட்ட மாகித் துலங்கியே யலிபாய் நீண்டு
சாதியைப் பிரிப்ப தற்குச் சதையொடு மூளைதோ லிரத்த
மோதிடப் பிரித்துண் டாக்கு முதல்வனே துணைசெய் வாயே.

தோலினி லெலும்ப தாகித் தொடர்ச்சியாய் நரம்ப தாகிப்
பாலினிற் றெளிவ தாகிப் பரந்தது விந்து மாகிக்
காலுகீழ் தலேமே லாகிக் கருவுக்கு ளமைந்த முத்தை
வேலேமுன் விழியாய் விட்ட வெளிபர மருள்செய் வாயே.

நூ ன் மு க ம்.

எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அருளெனச் சிறந்த வகுமத ரொளியி
லனைத்தையும் படைத்திடு மிறையோ ,,

கருமுகிற் குழலார் பாத்திமா வயிற்றிற்
கண்மணி முகியித்தீ னொலியைப்
பெருமையிற் சிறந்த வன்னபிக் குவந்த
பேரரா மசன்மர பினிலே
வருமபு சாலீ கருந்தவத் ததனால்
மைந்தரா யமைத்தனன் மாதோ. (க)

அமைத்திடு மாத மூன்றினிற் சிறந்த
வன்னையும் பிதாவுநித் திரையாய்
இமைத்திடா தணையிற் றுயிலையிற் கள்ள
னெழிலகம் புகுந்தவண் களவு
செயத்துணிந் தனைபாந் சென்றனன் மனது
திருக்கொடு மீண்டுபின் னெருங்கி
நயத்தபொன் மயிலார் பாத்திமா வணிந்தார்
நகைகளைக் கழட்டியே யெடுத்தான். (உ)

கழட்டிய நகையோ டினுமந்த வீட்டிற்
கண்டவப் பொருள்களை யெல்லா
மிழுப்பிலா தெடுத்து மூட்டையாய்க் கட்டி
யெடுத்துக்கொண் டேவெளி வருகால்
செழிப்புறுங் குணத்தின் பாத்திமா விழித்துத்
திருடனி னசுகைகண் டஞ்சி
மழைக்கரத் தபிசா லிகுதமை யெழுப்ப
மாண்பொடு மவரெழுந் திருந்தார். (ங)

இருந்தவக் கணவர் தம்மிட மெதுவா
யேகியே களன்வர வுரைக்கப்
பெருந்தவத் தபிசா லீககம் புழுங்கிப்
பெயர்ந்தகக் கதவினைத் திறந்தங்
கருந்தவம் புரியு மனைவியை நிறுத்தி
யவர்வெளி யாகிநோக் குற்றார்
பொருந்திய கள்ளன் வெளிவர நாடிப்
பூவையைத் தள்ளிவிட் டுவந்தான். (௪)

ள்ளிவிட் டகல்கால் பாத்திமா வயிற்றிற்
றரித்திடு மொலியுல்லா கரத்தைக்

கள்ளன்மே வீட்டி யோரடி யடித்தார்
கதறிக்கொண் டவன்றரை வீழ்ந்து
துள்ளியே துடித்துப் புரண்டுருண் டுடனே
சோர்ந்திறந் தனனது கண்டு
வள்ளலும் பாத்தி மாவுமிக் கயர்வாய்
மனத்திடை விசனமே கொண்டார். (ரு)

கொண்டிடும் போது பாத்திமா வகத்திற்
கொதிகொதித் தணிநகர் காப்போர்
கண்டர சனின்பா லுரைத்திடி லன்னோன்
கல்பினிற் கோபமிக் காகித்
தெண்டனை செய்தற் கவையினி லழைத்தாற்
செய்வதென் னெனவயர்ந் திடல்கண்
டண்டியங் கபிசா லிகுவிதிப் படியே
யாகுமென் றயர்வற வறைந்தார். (சா)

அறைதல்கேட் டகத்திற் றயிரியம் பெரிதா
யரசன்பாற் சென்றிடி லாதி
கறையற நமது வயினமைத் துள்ள
கான்மூளை யடித்ததென் றௌியா
தறைகுவ மதன்பின் விதிவழி முடிவ
தாமென விருவரு முறுகால்
இறைநகர் காப்போ ரறிந்துவர் தபிசா
லிகைவெளி வருகவென் றுரைத்தார். (எ)

உரைத்தசொற் செவியிற் கேட்டபி சாலீ
குடல்நடுக் கொடுமெழுந் தாதி
கருத்தனைப் புகழ்ந்து வெளியினில் வந்து
காவல ருடனடந் தரசன்
றரித்திடு மிடஞ்சென் றதபுட னவற்குச்
சலாம்சொலி நின்றன ரவரா
யுருத்திந்தக் கொலைபா தகம்புரிந் தவர்யா
ருண்மையா யோதுமென் றனனே. (அ)

ஓதுமென் றரையன் சொன்னது செவியி
லூற்றிடப் பயந்துடல் வேர்த்து

நீதியை நினைந்து மன்னனை நோக்கி
நிகழ்த்துமென் மனைவியின் வயிற்றி
லாதியி னருளா லமைந்துள சிசுவங்
கவன்றனை யடித்ததே யல்லா
லீதலத் துள்ளோ ரொருவரு மடிக்க
விலையிறை யாணையென் றிசைத்தார். (கூ)

இசைத்தவர் முகத்தைப் பின்னுமன் னோக்கி
யிஃதென்ன நிலையிலா வார்த்தை
திசைத்தலத் துள்ளோ ரதிஜயங் கொள்ளச்
செப்பினீர் கேட்பவர் மனது
கசக்குமே யல்லாற் றுதியினைக் கொளுமோ
கவைக்குத வாதசொல் லெடுத்து
நிசப்பட வுரைத்தீ ரிம்மொழி விடுத்தே
நேரினை யறைந்திடு மென்றான். (க0)

பொய்யல வென்சொல் நந்நபி யிறசூல்
புகழ்பொருட் டாணையாய் நிசமென்
றையலை யழைத்துக் கேட்கிலன் னவர்தாஞ்
சாற்றுவர் விபரமா யென்றார்
மெய்யென வரசன் றன்மனை வியின்பால்
விண்டனன் பாத்திமா மனைசென்
றையற வவரை யழைத்திவ ணுறுகென்
றனனுடன் சம்மதித் தெழுந்தாள். (கக)

எழுந்துமன் மனைவி தாதியர்ப் பார்த்தே
யேவலர் களையழை மென்றாள்
கொழுந்துவிட் டெரிதீ யகத்துறல் போலக்
கோதையர் பயங்கொண்டு வெளியாய்ச்
செழும்பத நோவ விரைவினில் நடந்து
சேவகர் தங்களைக் கண்டு
தொழுந்தவ வரசன் றேவியுங் களையே
வரச்சொன்னாள் சுறுக்கிலென் றுரைத்தார். (கஉ)

உரைத்ததட் சணஞ்சே வகரெழுந் தரிய
வுடைதலைப் பாகையு மணிந்து

நிலைத்திலே சரிகை யாற்பணி புரிந்த
நீனிறக் கச்சையு மிறுக்கித்
தலைத்தலம் புகழும் வெள்ளிவில் லைகளுந்
தடமுறு மார்பினி லணிந்து
துலைத்தனத் தடியுங் கத்தியு மெடுத்துத்
தோமறப் பிடித்துவந் தனரே. (கங)

வந்தவ ரரசன் மனைவியுற் றிருக்கு
மாளிகை யுட்புகுந் தரிய
சந்திர னெனவே தகுத்துறு மரசி
தம்மிட மச்சமா யடுத்து
மந்தரப் புயங்க ளொடுங்கிடக் குனிந்து
மண்டிக்கால் போட்டுக்கை கட்டிச்
சுந்தரத் தசிலீம் கதம்போஸ்து செய்து
சோபனங் கூறிநின் றனரே. (கச)

நின்றவர் முகத்தை மனைமங்கை பார்த்து
நிகரறும் வாயினைத் திறந்து
துன்றிய வானோர் புகழ்ந்திட மனையைச்
சோடனை செய்வது மல்லாற்
சென்றொரு நொடிக்குள் ளரசவர்க் கமுமே
திருப்தியாய்க் கொண்டுவா ருமியான்
மன்றலங் குழலார் பாத்திமா மனைக்கு
வரிசையோ டேகுதற் கென்றாள். (கரு)

நல்லதென் றுரைத்தப் போதையே யவர்க
ளவ்விடம் விட்டினி தகன்று
வில்லென விரைவிற் சென்றுபோ யரிய
வேடர்க டங்களை யழைத்துப்
பல்லவ மலர்க ளாலிறை மனைவி
பதியினைச் சோடியு மென்னச்
சொல்லவப் பொழுதே பூக்கள்கொண் டுவந்து
சுண்ணத்தால் மனையெலாம் புதுக்கி. (கசா)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

பீடுற வெவ்வி டத்தும் பிறங்கிடச் சுத்தஞ் செய்து
நீடிய மகமற் கட்டி நித்திலச் சரங்கள் கோத்து

வாடிடா மல்லி முல்லை மற்றும்பூத் தொங்கச் சூடிக்
கோடியில் விளக்கு மேற்றிக் குளோப்புகள் கோத்திட் டாரே. (கள)

கோத்தபின் ரசமுள் ளூட்டுங் குண்டுகள் நடுவே தூக்கி
யேத்தமார் பெண்கள் வந்தங் கிருக்கப்பஞ் சணைக ளிட்டு
நேத்தியின் பஞ்ச வன்ன நிலவிய விரிப்பெ டுத்துப்
பார்த்தவர் மகிழ வெந்தப் பக்கமும் விரித்து வைத்தார். (கஅ)

வைத்தவ ரரச தேவி மாட்டுவிண் ணப்பஞ் செய்தார்
தைத்தநூற் சரிகை யாடை தரித்தவம் மடவாள் தன்பா
லுய்த்துணர் தாதி மாரை யுடையணிந் திவண்வா ரென்னப்
பொய்த்தசொல் லில்லா நாவாற் புகலவந் தவர்கள் சூழ்ந்தார். (ககூ)

சூழ்ந்தவர் கவரி வீசிச் சோபனங் கூறி நிற்கத்
தாழ்ந்திடாப் புகழின் மன்னன் றையலன் னவளை நோக்கி
வாழ்ந்தசீ ரபிசா லீகு மனைவிபால் யான்செல் தற்குத்
தேர்ந்தநீர் யாரு மிங்கே சிறந்துறும் வரிசை யெல்லாம். (உ0)

எடுத்தலங் கார மாக வேகுமுன் பின்னர் யானுந்
தொடுத்தபூந் தட்டத் தோடுந் தோகையர் சிலர்க ளோடு
மடுத்திடு வேனென் றோத வச்சணந் தாதி மார்கள்
நெடுத்துள ராஜ வர்க்க நிரப்பிய வளந்தை யெல்லாம். (உக)

மங்கள முழக்கி ராஜ வாழ்த்தொடு மொவ்வோர் பெண்கள்
சங்கையா யொவ்வோர் பாத்ரந் தன்னைநன் றுகத் தூக்கி
யிங்கித மாகக் கொண்டே யில்லின்முன் றினிற்செல் காலை
யங்குறு மிராஜ சின்ன மனேகங்கள் முழங்கிற் றன்றே. (உஉ)

வாத்திய முழக்கத் தோடும் வரிசையின் பாத்ர மேந்து
நேத்தியார் தாதி மார்க ணீங்கிடா தொன்று போலே
பாத்துஷா மனைவிட் டேகிப் பகரபீ சாலி கென்போர்
வீற்றிருக் கின்ற மாட மேவியே வரிசை யெல்லாம். (உங)

அங்குளோ ரதிஜ யிக்க வழகுற வைத்து நின்றார்
இங்குறு மரசன் றேவி யெடுப்பன வெடுத்துக் கொண்டு
மங்கையர் பல்லர் சூழ வாகன மீதி லேறி
யெங்கணு முள்ளோர் போற்ற வேகினள் காவ லோடே. (உச)

காவலர் சூழ்ந்து செல்லக் கதிமிகு மபிசா லீகு
மாவலர் மனையிற் புக்கு மதிநிகர் பாத்தி மாமுன்
னாவலிற் சென்ற னாரை யருமையா யணைத்துப் புல்லி
நாவலர் புகழுந் தன்மை நன்குறப் புகழ்ந்து போற்றி (௨௫)

போற்றித்தான் கொண்டு போன புட்பமா லைகளைக் கையி
லேற்றமா யெடுத்த னாரி னெழிற்களத் தினிலே விட்டு
நாற்றிசை யவர்கள்மெச்சி நவிலுமா சனத்தில் வைத்து
மாற்றரு மழகை நோக்கி மகிழ்ந்தினி திருந்து பின்னர். (௨௬)

சேடியர்ப் பார்த்துச் சாடை செய்தன ளுடனே யன்னார்
மாடியில் வைத்த ராஜ வர்க்கங்க ளெடுத்து வந்து
மூடியைத் திறந்து பாத்தி மாமுனம் பரப்பி வைத்துப்
பாடியே கவரி யந்தப் பத்தினிக் கிரட்டி நின்றார். (௨௭)

கல்லுமே யுருகும் வண்ணங் கன்னிய ரிராகத் தோடுஞ்
சொல்லிய கவிகேட் டுள்ள தோகைய ராசி கூற
வல்லசீர் பாத்தி மாவை மன்னவன் றேவி நோக்கிக்
கல்வியீ ரிவைநும் பாத காணிக்கை கொள்க வென்றாள். (௨௮)

தாட்சியா யரசன் றேவி சாற்றிய துணர்ந்து மேன்மைப்
பாத்திமா தமதில் லேவற் பாவையற் கூவி யிந்த
மாட்சியார் வஸ்தை யெல்லா மனையகஞ் சேர்மி னென்றார்
காட்சியி னவர்க ளந்தக் கட்டளைப் படியே செய்தார். (௨௯)

அருளப்துல் காதிர் கர்ப்பத் தமைந்துள மாதா வங்கண்
வரும்வெற்றி மன்னன் றேவி மதிமுக நோக்கித் தாங்கள்
திரவியத் துடனிங் குற்ற சேதியென் னெனவன் னாரின்
கரம்பற்றி யந்த மாது கண்ணின்மேல் வைத்துக் கொண்டே. (௩௰)

தேவரீ ரெம்ம னைக்குத் திருப்பத நோகா வண்ணங்
காவல ருடனே தண்டி கையின்மிசை வருக வென்ன
வாவலாய்ப் போற்றி வாழ்த்தி யறைந்தன ளவர்க ளென்றன்
கோவினுத் தார மின்றி வருவது குணக்கே டென்றார். (௩௧)

அப்பொழு தரசன் றேவி யாள்விடுத் தபிசா லீகா
மொப்பிலார் தமைய ழைத்தே யுத்தரம் பெற்றுப் பின்னர்

வித்வான்,
M. அப்துல்

துப்புர வுயர்ந்த பாத்தி மாவெனுந் தோகை தம்மைத்
தப்பறக் கூட்டிக் கொண்டு தம்மனைக் கேகி னாளே. (௯௨)

மனையகஞ் சென்று கெர்ப்ப மாதென முன்ன ரங்கு
தனிமிகச் சோடித் துள்ள தவிசின்மே லிருக்க வைத்துக்
கனதியின் றுதி மாராற் கவரிவீ சிடச்செய் தண்ணல்
தனதிடஞ் சொலவாள் விட்டாள் பாத்திமா சார்ந்த செய்தி. (௯௩)

போனவர் சாற்றக் கேட்டுப் பொருக்கென வெழுந்து மன்னன்
றானனி மகிழ்ந்து தக்க சாரணர் பலர்க ளோடுந்
தேனிமி ரலங்க னுற்றுந் திருமனை வந்து பாரி
யானவட் குரைத்துப் பாத்தி மாதமைக் கோஷா வாக்கி. (௯௪)

திரையிட்டுப் பின்ன ருற்றுச் சென்றசா ரணர்கள் முன்னர்
மறைமுட்டு முகத்தி னாரே மறைப்பொரு ளுணர்ந்த தாயே
விரைகட்டுந் தங்க ளில்லின் மேவிய கள்ளன் றானுந்
தனைமுட்டக் கொன்றோர் யாவர் சரதமாய்ச் சொல்க வென்றான். ()

என்றுமன் னவன்வி னவ வேந்திழை பாத்தி மாதாங்
கொன்றவர் யாரு மில்லைக் கூறுமென் வயிற்றி லுற்ற
கன்றிலாச் சிசு விடது கையது நீன்று தாக்கப்
பொன்றினு னென்றார் மன்னன் பொய்மெய்யன் றாயுங் காலை. (௯௬)

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

பாதக நீங்கப் பாத்திமா வயிற்றின்
பாலகர் மன்னனைக் கூடவித்
தாதைசொன் னதையும் பொய்யென வுரைத்தாய்
தாயர்வார்த் தையையுநீ கேட்டுப்
போதமொன் றினிலுஞ் சரிப்படா திருந்தாய்
புகலுமென் பெயரஃ தப்துல்
காதிரும் களனை யடித்ததும் நானே
கவல்வதென் னினியென தையர். (௯௭)

நீதியி னிவ்வூ ரரசுசெய் திருப்பார்
நிகழ்த்தும் யான் பிறந்த மூன்று
மாதநீ மடிந்துன் தவுலத்து முழுதும்
வரையற வழிந்திடு நிசமென்

றோதினர் பின்னுங் கள்ளனே யெனதி
  னிடக்கரத் தாலொரு குற்றுப்
போதிய மட்டுந் தாக்கின னிறந்தான்
  பூபநீ யறிகெனப் புகன்றார். (கஅ)

இவ்விதப் புதுமை நடந்ததையரச
  னிதயத்தி லெண்ணியே தேறு
தெளவியம் பெருகி யுடலகந்திடுக்கிட்
  டன்னையாம் பாத்திமா தமையு
மொவ்வறு மபிசா லீகவர் தமையு
  முபசரித் துங்களி னிடத்திற்
கெவ்வம தகலச் செல்லுக வென்று
  னேகினர் நிசஞ்சொலு நெறியார். (கசு)

நிசஞ்சொலு மவர்கள் போனபி னரச
  னேருறு மந்திரி மாரை
விசனசஞ் சலமாய் நோக்கியம் மாதின்
  வியப்புள வயிற்றுறு மதலே
யசதிய தின்றி யுணர்த்திடு முறைக
  ளனைத்தையுங் கேட்டீர்க ளதற்காம்
நசியமென் னெனவே வினவின னவர்க
  ணவின்றிட லாயின ரம்மா. (சய)

அரிவையர் யாரும் பிரசவ கால
  மடுத்திடி லகத்திய நமக்குத்
தெரியவைத் திடுக வேண்மென வீவ்வூர்த்
  தெருவுக டோறினு முரசம்
விரைவினி லடிக்கி லிவ்வித நடக்கும்
  வீரரை யவணவ னனுப்பிப்
பிரசவ குழந்தை யாணெனிற் கொல்கிற்
  பிழைநமக் கிலேயெனச் சொன்னர். (சக)

சொன்னவை யரசன் கேட்டுளந் துடித்துத்
  துணைவரைக் கோபமாய் நோக்கி
யென்னபா தகத்தை யியம்பினீர் வல்ல
  விறையவன் விதிப்படி நடக்கு

மன்னதை விடுத்துக் கொலைத்தொழில் புரிகி
லதோகதி சார்குவ மல்லா
லென்னிலத் தினிலும் பாதக ரிவர்க
ளெனப்பெயர் வழங்கிடு மென்றான். (சஉ)

மன்னவ னிவ்வா றுரைக்கமந் திரியர்
மழுங்கலா யிருந்தன ரவரைப்
பின்னுமே யரசன் கோபமாய் நோக்கிப்
பேடிகாள்நீ விர்கள் யாரும்
இன்னொரு கால மிவ்வித மென்பா
லியம்பிடில் வாட்கொடு சிதைப்பே
னென்னவே சொலின னவர்கள்கேட் டுள்ள
மிரிந்திருந் தாரிறை யருளால். (சங)

அரிவையர்க் கரசு பாத்திமா வயிற்றி
லடிக்கடி கொர்ப்பநோ யான
துரியசீர் றமலான் மதிமுதற் றேதி
யோதிருந் திங்களி ராவிற்
பெருமையின் சுவர்க்க கூறுல்ஹீன் பெண்கள்
பெருப்பமாய் பாத்திமா மனைக்குள்
விரைவினிற் புகுந்து மணங்களை யெவணும்
வீசியே நெருங்கிநின் றனரால். (சச)

நெருங்கியங் குற்ற வரம்பையர் தம்மில்
நிகழ்த்தரும் சிற்சிலர் மகிழ்வாய்
அருந்தவம் புரியும் பாத்திமா கரத்தை
யழகுறப் பற்றியே பிடித்துப்
பொருந்தவே யவர்கள் வயிற்றினைத் தடவிப்
போற்றலும் வாழ்த்தலு மாக
விருந்தன ரிவர்கள் பெறும்பிள்ளை பொருட்டா
லியம்புமவ் வூரினி லம்மா. (சரு)

ஓதிடு முப்பத் தொன்பது பெண்க
ளுடையவ னருளின லன்று
பேதம தறவே பிள்ளைகள் பெற்றே
பெருமையி னிருக்கையி லுண்மை

வேதனி னருளால் பாத்திமா தமக்கீர்
விலாநெருக் கொடுவயி றதுவும்
போதவே வலியுண் டாயவர் மயக்கம்
பொருந்தினர் திருந்தரம் பயர்கள். (சசு)

கோதையீ ரகத்தி லஞ்சிட வேண்டாம்
குதாயரு ளாலொரு நொடிக்கு
ளேதம தறவே பிரசவித் திடுவீ
ரென்னவே சொல்லவப் போதிற்
பூதலத் தவர்கள் போற்றுடக் கின்றிப்
பொற்கனி பழுத்துறல் போல
மூதறி ஞோர்க்கு மாதர மான
முகியித்தீ னுண்டகை பிறந்தார். (சஎ)

பிறந்திடும் பாலர் மேனியி லீரம்
பின்முனு மணுவள விலதா
யறந்தரு மரம்பை மார்கொணர் பட்டி
னுடையைப் பாலர்மேற் போர்த்தி
நிறந்தரு கரத்தா லெடுத்தணைத் தழகார்
நெற்றியின் முத்தமிட் டுவந்து
பறைந்திடு மணநீ ராட்டியே பின்னர்
பாத்திமா திருக்கரங் கொடுத்தார். (சஅ)

கொடுத்தவ ராசி கூறியே வாழ்த்தக்
கோனபி சாலிகு கேட்பத்
திடத்தொடும் றகுமத் துமக்குநும் மனைக்குந்
தீனுள மூமினோர் தமக்கு
மடுத்தெனி னொலியை யுவந்தவர் தமக்கு
மருளின னெனவிறை சத்தம்
நெடுத்துவந் ததனு லவர்மகிழ்ந் தோர்மை
நினைவொடுந் தொழுதினி திருந்தார். (சகூ)

மனையெலா நிறைந்த வரம்பையர் யாரும்
வாழ்த்திவா னடைந்தன ரதற்பின்
தனையராம் குதுபு நாயகர்தம்மைத்
தாயரங் கெடுத்தழு தூட்டத்

தினையள வினிலு மார்பிடை வாயைச்
சேர்த்திடா தகற்றிமா முகத்தைப்
பனமுடி யாத விதத்தொடுந் திருப்பிக்
கொண்டனர் பாத்திமா வெனுந்தாய். (ருய)

பின்னுமே பாலர் தமையுப சரித்துப்
பிறங்கெழின் மார்பமு தூட்ட
முன்னர்போன் முகத்தைத் திருப்பிக்கொண் டமுத
முறைப்படி யுண்டிடா திருந்தா
ரின்னவா றிவணு கியபொழு தவ்வூ
ரிருந்துள கல்வியர் சிலர்க்குள்
நன்னய நோன்பின் றென்னவு நாளைக்
கென்னவு நவிற்றலிற் கலகம். (ருக)

தலைப்படச் சிலர்மத் திசர்களா யவர்க
டங்களை நோக்கியிவ் வூரிற்
பெலத்தபி சாலீ ககத்திலோர் மதலை
பிரபல்ய காரணத் தோடுங்
குலத்தவர் புகழப் பிறந்துள தங்கண்
குறுகியப் பிள்ளையின் றாய்பால்
நலத்தொடின் றுங்கள் சிசுவினு னடந்த
நவமென்கொ லென்னவே கேட்போம். (ருஉ)

நவிலுநோன் படையா ளம்மவண் சிசுவால்
நடந்துறிற் கூறுவ ரப்பாற்
கவலைக ளறயாம் சொல்லுவ மென்னக்
கழறியே பாத்திமா மனைபோய்த்
தவநிலை யவரை யழைத்துநா யகியே
தஞ்சிசு வாலிவ ணிரவிற்
றுவமுறும் புதுமை நடந்துறி லதனைச்
சொல்லுக வெம்மிடத் தென்றார். (ருரு)

அம்மொழி கேட்டங் கரிவையர்க் கரசி
யாதிதன் னருளினு லெமர்க்கு
நன்மையாய்க் கிடைத்த பாலரால் நடந்த
நவமொன்று மில்லையென் றுலும்

செம்மையாய் விடிவே ருகமுன் னிருந்தெஞ்
 சேயமு தருந்தில ரதனுல்
விம்மிதத் தொடுபல் விதமமு தீந்தும்
 விரும்பில ரமுதில ரிஃதே. (ருச)

நடந்ததிங் கெமது பாலரா லென்ன
 நவின்றனர் கேட்டவர் யாருந்
திடந்தரு மனத்த ராகவே கௌது
 செய்கையா லின்றுநோன் பெனவே
தொடர்ந்தவர் யார்க்கு மூரவ ரெவர்க்குஞ்
 சொல்லிநோன் பிருந்தன ரந்நாட்
கடந்தகல் வியர்கள் யாவரு மொப்புக்
 கொண்டனர் கழங்கற வன்றே. (ருரு)

திடந்தரு மொலிக ளுயகர் பிறந்த
 தினத்தினி லிவ்விதப் புதுமை
நடந்ததி லபிசா லீகக மகிழ்ந்து
 நவிலுந்தம் மினத்தவ ருடனே
கடந்தகல் வியரை முதியரை மறைதேர்
 கனதியர் தம்மையு மழைத்தே
யிடந்தரு மனையி லிருத்திவைத் தவர்கள்
 யாவர்க்குஞ் சங்கைமிக் கியற்றி. (ருசு)

விருந்துணச் செய்து சந்தன கந்தம்
 வெற்றிலை பாளிதங் கொடுத்துப்
பொருந்துமெய் வேத நாதமே முழங்கப்
 புகழொடு மம்மறைப் படியே
யருந்தவ மதலைக் கப்துல்கா தீறென்
 றழகிய நாமமு மிட்டுத்
தருந்தரு வெனலா யேழைமற் றெவர்க்குந
 தனமணி துகில்நனி கொடுத்தே. (ருஎ)

ஜனநிறைந் துற்ற களரியில் வேதஞ்
 சாற்றிய முறைப்படி ஹக் கீக்கா
கனதியிற் கொடுத்தங் கினத்தவர் யாருங்
 காமுறும் படிநிதி யளித்து

வாகுட னிருக்கத் துஆச்செயி தருள்வீர்
முகம்மது நபிமன மகிழும்
யோகமார் பேர ராகவந் துதித்த
வுத்தம முகியித்தீ னொலியே. (சூசூ)

வாழி-விருத்தம்.

ஆதிதன் கிருபை வாழி யகுமதெம் மிறசூல் வாழி
சோதியின் யார்கள் வாழி தூய்ஸகு பியர்கள் வாழி
கோதிலா உசைனன் வாழி குறைவிலா நபிமார் வாழி
தீதிலா வொலிமார் வாழி தீனவர் வாழி வாழி. (சூஎ)

ஜென்னத்தின் வானோர் வாழி திவ்விய ஜயிலா னூர்வாழ்
மன்னத்த ரபிசா லீகு மனைமக்கள் யாரும் வாழி
பன்னுத் தமத்தின் கல்விப் பாவல ரெவரும் வாழி
மன்னுத்த மத்தி னீதி மன்னவர் வாழி வாழி. (சூஅ)

சதகமிங் கிதனைப் பாடத் தலீல்செய்தோ ரெவரும் வாழி
யிதமுறப் படிப்போர் கேட்போர் யாவரும் பெருகி வாழி
யதிவித வேதம் வாழி யத்வித ஞானம் வாழி
முதுபுக ழெவையும் வாழி முகியித்தீ னொலியும் வாழி. (சூகூ)

முகியித்தீன் சதக முற்றிற்று.

—(*)—

ஆனந்தக் களிப்பு,

காப்பு-வெண்பா.

இல்லல்லா கூவென் றேற்றிமெது வாயிழுத்தே
யல்லுபக லெல்லா மஃதாக்கில்—நல்லவர்கள்
வெல்வா ரிபுலீசை வேகமுட னேதிருத்திச்
செல்வார் மனத்தழுக்கைத் தீய்த்து.

கண்ணிகள்.

இல்லல்லா கூவென்னு மனமே—நம்மள்.
யாரையு மொன்றாகச் சேர்ப்பது நிசமே- (இல்லல்லா)

சரணுநுடந்த அனுபல்லவி.

(க) நல்ல குணமுள்ள வல்லோன்—அவ
னுவாலே யோதுவான் மேலேறி மெள்ளக்
கள்ள னிபுலீசை யோட்டில்—அப்போ
காட்டுவான் கமலத்தின் பூட்டை யுடைத்தே— (இல்லல்லா)

(உ) பொல்லாத வாசையைக் கொல்லு—அங்கே
பூத்த கமலத்திற் றங்கியே நில்லு
கல்லார்க ளைவிட்டுச் செல்லு—நல்ல
களையேறி ஞலங்கு காலனை வெல்லு— (இல்லல்லா)

(ங) தேங்கா யுடைப்பது கல்லு—நாவைத்
தேற்றி நுளைப்பது நாணத்து வில்லு
ஆங்காரப் புலனைந்தை வெல்லு—அப்போ
தானந்த மாகநீ ஹக்கனைச் செல்லு— (இல்லல்லா)

(ச) பொய்யற்ற வாழ்வைநீ நம்பு—இநதப்
பூதலந் தன்னி லுளைப்பதை வெம்பு
தையலைச் சேர்வதே வம்பு—காமந்
தன்னைத் துரத்தி யடிபெருங் கொம்பு— (இல்லல்லா)

(ரு) சொர்க்க பதவியைத் தேடு—வல்லோன்
றூதர் சலவாத்தைத் துடராகப் பாடு
வர்க்கநால் வேதத்தை நாடு—நம்மள்
வள்ளல் முகியித்தீன் குருபதங் கூடு— (இல்லல்லா)

(சு) உலகத்திற் குருவென்று தேடி—தேச
மோடி யலைந்தாலு முன்மனம் வாடி
கலகமாம் பேயது கூடி—யுன்னைக்
காடுமே டாக விழுக்குமே பேடி— (இல்லல்லா)

(எ) இல்லறந் தனிநின்று நீட்டி—யொன்றை
யிழுத்துப் பிடித்தந்த வாயிலைப் பூட்டி
யல்பகல் நினைவினைக் கூட்டி—யதை
யடக்கிடி லானந்தங் கிடைக்குமே சூட்டி— (இல்லல்லா)

(அ) நல்ல நினைவினைப் பற்றி—நீரா
ளய னிருப்பிடங் கண்டுவாய் பொற்றிக்
கொல்லன் துருத்திபோல வித்தி—யூதிக்
கோமா னிறசூல் குதாமொழி சொற்றி— (இல்லல்லா)

(கூ) காணாத பேர்களுங் காண—மனக்
கல்பி லுறுதியைக் கொண்டிடிற் றேணத்
தேனு மமிர்துண்டு பூணக்—கண்டு
தெவிட்டாக் கனியை யருந்தலாம் வேண— (இல்லலல்லா)

(க0) ஆதியி னலிபாக நின்று—நம
தைனுக்கு ளொளியம்° தாகவே சென்று
சோதியி னுக்தாக வொன்று—எங்கும்
சொக்குதே மீம்வட்டத் துள்ளிலே நன்று— (இல்லலல்லா)

(கக) தேசத்தி லேகள்ள ஞானி—பலர்
திசையெல்லா மோடித் திரிகுவர் மோனி
பாசம்விட் டவர்போல்நீ ஜானி—கெட்டுப்
பரதவித் திடும்படி சொல்லுவர் தியானி— (இல்லலல்லா)

(க௨) அஞ்செழுத் தென்பர்சொல் நேராய்க்—கொஞ்சம்
அல்ஹம்து சூறுவை யாராய்ந்து பாராய்ப்
பிஞ்செழுத் தென்பர்கள் சூராய்க்—கெட்ட
பேயர்போ லாக்குன்னைக் கிளப்புவர் பாராய்— (இல்லலல்லா)

(கங) காசு பணமென்பர் முட்டிக்—கள்ளுக்
கஞ்சா வபின்கற்ப மாமென்பர் குட்டிச்
சாவினி யிலேயென்பர் மட்டி— வாசிச்
சரத்தைத் தெரியாத சண்டாளர் கெட்டி— (இல்லலல்லா)

(கச) பஞ்சபூ தியமென்பர் தெரியார்—அங்கே
பரிந்தோடி நிற்பதை யினதென்று மறியார்
கொஞ்சமு மன்னம் புசியார்—கஞ்சாக்
கொள்ளமட் டிம்புகை யள்ள விழுப்பார்— (இல்லலல்லா)

(கரு) கற்பங்க ளுண்கிறே மென்பார்—இஷ்டங்
கண்ட விடமெல்லா முண்டாகு மென்பார்
ஒப்பறு கனிபழ மென்பார்—அதை
யுண்டு களித்திங் குறங்கிறே மென்பார்— (இல்லலல்லா)

(கசு) கண்டவர் சொல்லவு மாட்டார்—தங்கள்
கல்புக் கிசைந்துள சீடரைச் சேர்ப்பார்
சென்றவன் றன்னொடு மிருப்பார்—சீடன்
திறமாக விறையருள் வேண்டியே காப்பான்— (இல்லலல்லா)

(௧௭) கல்லாத மூடர்கள் வந்தே—யருள்
காட்டுவே னென்றுபற் பாட்டுகள் சொல்வார்
நல்ல மனுடர்கள் கண்டால்—அவர்
நாடாம லோட்டுவார் போடாபோ வென்று— (இல்லல்லா)

(௧௮) நல்ல பொருள்களைச் சொல்வேன்—இறை
நாயக னேவற் படிகாண விள்வேன்
பொல்லாக் குபிர்களைத் தள்வேன்—தீனர்
புகழு முகம்மத ரேவலைக் கொள்வேன்— (இல்லல்லா)

(௧௯) ஷரிஅத்து முதல்வழி மண்ணும்— கண்டு
சமதாய்த் தெரிந்திடிற் றுனஃ தொண்ணும்
தரிக்கத்தி ரண்டாநீர் தண்ணும்—பார்த்துத்
தானறிந் தேயாவும் விட்டிடில் விண்ணும்— (இல்லல்லா)

(௨௰) பருவம துறுங்காலந் தன்னில்—மனம்
பார்த்தே ஹக்கீக்கத்தைக் காற்றாகக் கண்டே
யருளாக வதினிற்கு முருவைக்—காணி
லதிக நெருப்புக் கறுப்பாகத் தோற்றும்— (இல்லல்லா)

(௨௧) மறைவான தெளிவுள்ள பேர்கள்—ஹக்கன்
மஹரிபா விட்டிடில் மற்றொன்று மில்லைத்
திறமாக றப்பனைக் காண—வழி
தெரிந்துள குருமாரைத் திடனாகப் பிடியும்— (இல்லல்லா)

(௨௨) அருளைத் தெரிந்தவர் வருவார்—குறி
யன்பாகக் கண்டவ ரின்பமே புரிவார்
பருவம் வருங்காலம் பார்ப்பார்—கூட்டிப்
பாங்குடன் கற்பத்தை முன்பினுந் தருவார்— (இல்லல்லா)

(௨௩) சதமென்று நடுவெடுத் திடுவார்—சீஷர்
சற்குரு சொன்னதைச் சதமென்று கொளுவார்
மதமறக் காலையி லடுப்பார்—கொஞ்ச
மனக்கப டுகள்விட்டு மாலையி லடுப்பார்— (இல்லல்லா)

(௨௪) தேனு மமீர்தென்று சொலுவார்—கண்டு
சீஷர் மனத்தைத் தெளித்தங் குரைப்பார்
கானூர் கருவியைக் காட்டி—இஷ்ட
கலியைப் பிடித்துத் தரித்தல்நன் றென்பார்— (இல்லல்லா)

(உரு) பிடித்தகை விட்டிடா தழைப்பார்—ஜலம்
பெரிதாக வோடிடு நதிக்கரை சேர்வார்
அடுத்துநாற் றிசையினும் பார்ப்பார்—அங்கே
யாட்களா ரம்பம தில்லா திருக்கில்— (இல்லல்லா)

(உசு) கருவியைக் கரந்தனி லெடுப்பார்—உடன்
கைவிரல் நீளத் துணியையு மெடுப்பார்
சரியென்றே யவனிட மடுப்பார்—கிட்டத்
தானு மிருந்து தலையைச்சா யென்பார்— (இல்லல்லா)

(உஎ) ஓய்வில்லாப் புனலையுந் திறப்பார்—அப்போ
தோயாமற் பேசுஞ ஜிபுரிலைப் பிடிப்பார்
நேய முடன்றுணி யெடுப்பார்—அலீப்
நீட்டி யிழுத்து நடுவே வளைப்பார்— (இல்லல்லா)

(உஅ) பத்தி விடாமலே பிடிப்பார்—கெட்ட
பாவி யிபுலீசைப் பார்த்தங் கடிப்பார்
கத்தியை யெடுத்துத்தான் தொடுப்பார்—சந்த்ர
காந்தி முதற்பிறை போலே யறுப்பார்— (இல்லல்லா)

(உகூ) கெட்ட இபுலிசி ரத்தம்—தன்னைக்
கீழே யுமிழ்ந்துவாய் கொப்பளி யென்பார்
இட்ட முடன்பாக் கிலையும்—வாயி
லின்பொடு கூட்டிவிட் டுண்ணக் கொடுப்பார்— (இல்லல்லா)

(௩௰) வெட்டின ரத்தம்போய் மீண்டு—சென்று
மெய்யி னழுக்கினை வேரோ டகற்றும்
பட்டி பிடித்தவன் மிரண்டு—துஷ்ட
பாதகம் போக்கிடும் பாதை யுமிதுவே— (இல்லல்லா)

(௩க) கரிசாலை யைக்கொண்டு வந்து—சாறு
கசக்கிப் பிளிந்து கலையத்தி லூற்றித்
துரிசொடு மாவின்பாற் சேர்த்து—முன்னர்
சொல்லிய போல்வெண்ணெய் யள்ளியே போட்டு (இல்லல்)

(௩உ) பசுவின் கிடாரியைப் பாரு—வெள்ளைப்
பாற்கண்டு போடாத மாட்டையுந் தேடு
விசுவாச மதன்கிட்டச்சேரு—பசு
விட்டிடு நீரையுஞ் சரியெடை போடு— (இல்லல்லா)

(௩௩) சரியாக மூன்றையுங் கூட்டித்—தீயிற்
றுனீரி லாமலே மைபோ லெடுத்துப்
பரிவாக வைத்துக்கொண் டதனை—நல்ல
பாங்காகப் பாவிக்கும் பரிசுமிவ் வாறே— (இல்லல்லா)

(௩௪) காலையில் மாலையிற் றெருட்டு—வெட்டுங்
கரணையிற் றடவியே கரைந்ததின் பின்னர்
மேலை யண்ணுவினி லூட்ட—மையம்
மேலேறிச் செல்வது குறிப்பாகப் பாரு— (இல்லல்லா)

(௩௫) பன்னிரண் டங்குலம் பாயும்—பாய்ந்தாற்
படைத்த குதாயவன் பாதமே தோயும்
திண்ணிய சூரியன் பக்கம்—கண்டு
தெளிவான சந்திரன் வலமாக நிற்கும்— (இல்லல்லா)

(௩௬) நாவைக்கொண் டேற்றிடும் போதிற்—றாலம்
நடுங்குந் திரேக மலைப்பாகக் காணும்
சாவது போலவுந் தோணும்—அப்போ
சத்த மிடிபோல மெத்தவுங் காணும்— (இல்லல்லா)

(௩௭) நாளுக்கு நாட்செலு மிலையேல்—ரண்டு
நயனத்தின் மேலாகத் தானே வெடிக்கும்
தீனுக் குவந்தவர் வந்தாற்—கிட்டத்
திடமோடு முன்பினில் வைத்துநீ பாரு— (இல்லல்லா)

(௩௮) நாளுக்கு நாட்சொன்ன நேரம்—ஐந்தும்
நன்றாகத் தொழுதுகொள் நாயனைக் கண்டு
காணாத பேர்களுங் காண—வுன்றன்
கல்புத் தொழுகையைக் கருத்துக்குட் சேரு— (இல்லல்லா)

(௩௯) சொல்லாது போனலு மில்லைக்—குருத்
தொட்டுக் காட்டாததுங் கிட்டவ ராது
நல்லின்ப மாயிதைச் சொன்னேன்—மூமி
ஞனவர் கேட்டு நலமாய் நடப்பீர்— (இல்லல்லா)

(௪0) தொழுகையை விடுந்தோஷி களுக்கு—நாளைச்
சொர்க்கம் கிடையாது மகுஷர் வெளியில்
கழுதைபன் றிகள்போலே வருவார்—நாறின்
கனலில் விழுந்து தணலா யெரிவார்— (இல்லல்லா)

(சக) எம்பிற சூலின் கிருபை—பொல்லார்க்
கில்லை ஷபாஅத்து மனுஷர் வெளியில்
வெம்பி முகம்வாடி நின்று—நாறில்
வீழ்ந்து கருகி வெறுமை யடைவார்— (இல்லல்லா)

(சஉ) ஷரீஅத்தை விட்டவ ரெல்லாம்—பெற்ற
தாயில்லாப் பிள்ளைபோ லாகு முவமை
இனியென்ன விதற்குமேற் சொல்வேன்—தீனே
ரிதய மகிழ்ந்துகொண் டேவலைச் செய்வீர்— (இல்லல்லா)

(சந) சொல்லாத ஞாயங்கள் சொன்னேன்—இந்தச்
சொல்லை யறிந்தோர்க ளள்ளுவர் வெண்ணெய்
கல்லாத மூடனு கூறு—முகம்
மதுப்புல வன்சொன்னே னினிப்பாக யார்க்கும்— (இல்லல்)

(சச) ஆதிமு கம்மது பேரர்—இந்த
ஆலம் புகழுபி சாலிகு பாலர்
சோதிமு கியித்தி னுதர்—பையல்
துயர்தீர்த் திரட்சிப்பா ரென்றென்று நிசமே— (இல்லல்லா)

(சரு) வல்லவன் றகுமத்து வாழி—அவன்
வரிசை மிகுந்தமு கம்மதர் வாழி
சொல்லரும் யார்களும் வாழி—வீரந்
துலங்கும் ஸகுபிகள் யாவரும்—வாழி— (இல்லல்லா)

(சசு) ஒலிமார்கள் யாவர்க்கு மொலியாய்—வந்த
வுண்மைமு கியித்தீ னுண்டகை வாழி
நலிவற நாகையில் வாழும்—எங்கள்
நாயகர் ஷாகுல் ஹமீதொலி வாழி— (இல்லல்லா)

(சஎ) கழறிந்த வானந்தக் களிப்பை—மனக்
கனிவாகப் படிப்பவர் கேட்பவர் வாழி
யழகுறத் தலீல்செய்வோர் வாழி—மூமி
னனைவருஞ் செல்வமுற் றனுதினம் வாழி— (இல்லல்லா)

இல்லல்லா கூவென்னு மனமே—நம்மள்
யாரையு மொன்றாகச் சேர்ப்பது நிசமே— (இல்லல்லா)

ஆனந்தக் களிப்பு - முற்றுப் பெற்றது.

—(*)—

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

மதிவர வழைக்தோ ரிந்த மானில குருவாய் வந்தோர்
புதியவன் றூத ராள புகழ்நபி யிறசூல் பேரர்
கதியபி சாலி கீன்ற கான்முளை பகுதா தூர்வாழ்
இதமுறு முகியித் தீனைப் போதென்பால் வருகு வாரோ. (க)

பதம்-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்

பல்லவி.

எப்போவரு வாரோ—ஷெய்கப்துல்காதி
றெப்போவரு வாரோ.

அநுபல்லவி.

எப்போவரு வாரோ வென்றன்கலி தீர
துப்புர வாகவந்த சுல்தான் முகியித்தீன். (எப்போ)

சரணங்கள்.

(க) ஆதியைத் தேடி யருள்பெற நாடிச்
சோதிமய மாகவந்த தூதர் நபி பேரர்
சொன்னமே மயில், வன்னமே குயில்—
அன்னை பாத்திமா, வென்னும் தாயர்சேய். (எப்போ)

(உ) வாழை கமுகு சூழ் சோலை பகுதாதில்
நீளும் புகழப்துல் காதிர் முகியித்தீன்
நாளைமகு ஷறு, வேளை யிபுலீசு—
கோழை யடாமலே, தாளைத்தந் தாட்கொள. (எப்போ)

(ங) சின்னஞ் சிறியவ னுகூ ரென்னும்பயல்
என்றுஞ்செய் யும்பிழை யேகிட வாகுறும்
ஏந்தல் முகியித்தீ, னுண்டகை தாம்வந்தே—
யீடேற்றஞ் செய்திட, இன்பம் பெருகிட. (எப்போ)

முற்றிற்று.

பதம்-இராகம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஷேகப்துல் காதிறெம் மொலியே—அடிமைநான்
செய்பிழை தீர்ப்பீரோ—அடிமைநான்-செய்,

அநுபல்லவி.

வாகுற்ற பொழில்சூழ் பகுதாதில் வாழ்ந்திடும்
வள்ளலே யெள்ளறு, முள்ளவுல் லாசரே. (ஷேகப்)

சரணங்கள்.

(க) தேசங்க ளாண்டிடும் ராஜர்கள் ராஜர்
தீனபியின் பேர ராகிய வொலியே
காசக லெங்களின் கண்மணியே யப்துல
காதிர்மு கியித்தீ ணண்டகை நிதியே
தோசங்கள் யாவையும், நீக்குமிப் போதிலே
துங்கம் பெருகிட, இங்கித மாகிடச்— (ஷேகப்துல்)

(உ) பத்து வயததிற பெற்றதா யைவிட்டுப்
பாதையில் ஒரு ஜ்ஜிக்கேகிடும் போதிலே
சித்தம் கலங்காம லுற்ற களரைவெல்
சிங்க வொலியேநற் றுங்கம் பெருகிய
கத்தனரு ளது, மெத்தவு முற்றிடும்
கௌதுல் லகஉமு கியித்தீ னொலியே— (ஷேகப்துல்)

(ங) சித்திர மார்மிசு றுத்தெரு வேளையிற்
சேயிளை கேட்டதை யோயாம லீந்தோரோ
கத்த னருளினல் மெத்த முகுஜிதாத்
காட்டி வழிகடந்தேட்டி லடங்காத
கானகந் தன்னிலே, யானைபுலி சிங்கம்
கற்சனைக் கஞ்சாம, லுச்சிதங் கொண்டோரே. (ஷேகப்துல்)

(ச) கெட்டகா பிர்களைத் துட்டகன் ஞசினே
நட்டப் படும்படி கெட்டியாக வென்று
மட்டிக் குபிரர்க ளிட்ட முடன்கலி
மாவை யுரைத்திசு லாத்தில் வரச்செய்து
எட்டெட்டுக் கலையுந், தேர்ந்தவுல் லாசரே
ஏழைநா கூரைக்காத், தேபிழை தீர்ப்பீரே. (ஷேகப்துல்)

முற்றிற்று.

பதம்-இராகம்-உசேனி-திரிபுடை தாளம.

பல்லவி.

என்னையே காரும்—ஷெய்கப்துல்காதி
றேழைமுகம் பாரும்.

அநுபல்லவி

என்னையே காரு மேழைமுகம் பாரும்
அன்னைபாத்தி மாயின்ற வழகார் முகியித்தீனே. (என்னையே)

சரணங்கள்.

(க) முன்னே யுதித்திலங்கு முத்தவ தாரமான
நந்நபி முகம்மதுற சூல்மகிழ் பேரனுரே
அன்னியத் திலாதகௌதுல் லகுலமு கியித்தீனே
யின்னேர மேயிரங்கி யேழைதுயர் தீருமையா (என்னையே)

(உ) ஹக்க னிடத்தில்மிகு முக்கிய மானவருட்
காரணம் பெற்றுநல வாரணம் விளக்கியே
திக்குக ளெல்லாம்புகழ் ஜெய்லானி லேபிறந்து
தக்கபகு தாதினிற் றரித்தமு கியித்தீனே. (என்னையே)

(ங) சொந்த மிசுறதனில் ஹலாக்கான கப்பலைச்
சுறுக்காய் வரவழைத் திடுக்கண் தவிர்த் தோரே
யந்தம துறுமபு சாலிகு பாலனுரே
யடிமைநா கூளைக் காத் தருளுமு கியித்தீனே. (என்னையே)

முற்றிற்று.

ஜெயிலானூர் வழிநடைச்சிந்து.

இராகம்-நாத நாமக் கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெய்லானி பார்க்கலாம் வாரும்—மூமின்
ஜெயம்பெற லாங்கூட நீரும்.

அநுபல்லவி.

ஜெய்லானி பார்த்தாலும் ஜென்மகளை சேரலாம்
குயிலான பாத்திமா கோதையி ருந்ததலம்
குறிப்பாகப் பார்க்கச்—சனங்களெல்லாம்
சிரிப்பாக வாரும்
காடு வனங்கடந்து கானகந் தன்னிற் சென்று
மாடு மயிலன் னங்கள் மலேமே லுலாவுது
மங்கையே பாரும்—இஷ்டமான
மறையோர்காள் சேரும்
நாடு நகர்கடந்து நதியின் பதிகடந்து
ஓதி மிக நடந்தங் குள்ள மகிழ்ந்திடவே. (ஜெய்லானி)

சரணங்கள்.

(க) கண்ணுககு முன்னாலே கானல் தெரியுது
கான மயிலொடு காகம் பறக்குது
கலையாமல் வாங்கள்—என்னுடைய
கண்மணி நீங்கள்
பூமரச் சோலையும் புன்னையு முன்னையு
மாமரம் பூத்து மதிபோ லிலங்குது
மறையோரே பாரும்—அருள்சிறந்து
நிறைமாதர் சேரும்
மல்லிகை முல்லையு மாதுளை கொய்யாவும்
நெல்லியும் வில்வமு நின்றங்கு லாவுது
நேசரே வாரும்—வகைவகை
மாதர்கள் கூறும்
வேதமு ழங்குது மெய்யினில் வேர்க்குது
தாகங்க ளாகுது தர்வேசு முகியித்தீன். (ஜெய்லானி)

(உ) சந்தனச் சோலையும் சவ்வாதுப் பூனையும்
கந்துக மேய்ந்து கனைத்துக் குதிக்குது!
கண்களாற் பாரும்—நேசர்காள்
கல்பினி லோதும்
விந்தையர் புகழுந் தயாளபு சாலிகு
சொந்த நகரினி லுந்தமு னிங்குறும்
வேங்கையைப் பாரும்—சிங்கம்யாளி
வேழங்கள் பாரும்
அந்தர மாகவே தானடி குதிக்கிது
மந்தர மில்லாமல் வானர மந்திகள்
மரநாய்கள் பாரும்—பிள்ளையாயிங்கு
மான்குட்டி பாரும்
திடமுடன் பாதையிற் கடமானும் வருகிது
உடுமானம் பூண்டோர்கள் இடம்விடா மல்வாரும். (ஜெய்லானி)

(ங) பகுதாது தனிற் பள்ளி வாயிலுந் தெரியுது
பாங்கு மனாுவின் பளிங்குகள் வீசுது
தனவான்கள் வீட்டிற்—றங்கக்கொடிச்
சதங்கைகள் குலுங்க

மிகுவிலே லஸ்தர்கள் ஜகஜோதி துலங்கிட
ஜெகத்திலெங் கணுங்கிட்டா தித்தலம் போகவே
செய்கையும் பாரும்—ஆமீன்கூறிச்
செயிலாணி வாரும்
கருணை மிகுந்திடவே கல்பு குளிர்ந்திடவே
பெருமை நிறைந்திடவே பெட்பு வளர்ந்திடவே
பிரியமாய் வாரும்—முகியித்தீனென்
குருபதஞ் சேரும்
அருமை மிகவுமுள்ள ஹக்க னபியிறசூ
லகமகிழ் பேரனு ரப்துல்கா திறுலியின் (ஜெய்லாணி)

முற்றிற்று.

இரட்டை யாசிரிய விருத்தம்

ஹக்கனருள் பெற்றுமக் காஙகரி லூற்றிடுங்
காருண்ய ரான விறசூல்
கால்களைச் சிரசிமீ தேற்றியே சொல்லுமெக்
காலுந் துதித் தருமையாய்த்
திக்கெலாம் புகழுமசு ஹாபிகளை யார்களைச்
செயிலாணி யிற்பிறந்த
செய்யிதுமு கியித்தீ னுண்டகையை நாகூருச்
செய்கப்துல் காதி றுலியைச்
சிக்கந்தர் சாகிபொடு நத்கறுலி நாதரைத்
தென்கிழக் கேறு பாடிச்
செய்யிதிபு றுஹிமொலி யைக்குணங் குடிகொண்டு
சென்னைவாழ் மஸ்தான் சாகிபை
யிக்குநிகர் மற்றுமொலி மார்மூமின் முசிலிமை
யெக்கால முந் துதிக்கு
மெழிலார் முகம்மதுநா கூருமுத் துப்புலவ
னின்புறச் செய் றகீமே.

முற்றிற்று.

நாகூர் வழிநடைச் சிந்து.

பல்லவி.

நாகூர் பார்க்கலாம் பெண்ணே—யெட்டி
நடந்துவாடியென் கண்ணே.

அநுபல்லவி

ஷாகுல் ஹமீதொலி நாயகமானோர்
சர்வரே யால நபிபேர ரானோர்
காமி லொளிகளின் காரண ரானோர்
காதி றொலிபதங் காணவே போவோம் (நாகூர்பார்க்கலாம்)

சரணங்கள்.

(௧) தில்லை நகரம்விட் டப்புறஞ் சேர்ந்திடச்
சேர்ந்து நதிக்கரை பாரும்—ஆற்றில்
ஓங்கும் குமிழியி னீரும்
மங்கையர் கூடியே கங்கை நதிக்கரை
சங்கீதம் பாடின பேரும்—ஓடம்
கொண்டு வருவோர்கள் சேரும்
அண்டமு லாவிய மண்டல மெங்குமே
சென்று வருங்கதிர் போலும்—கூடிக்
கொண்டுவந் தாரோட மேலும்
நின்றகற்புடை மங்கை மார்களும்
சென்ற தற்குளே சண்டை முரசுபோல்
வண்டு போலவே— (நாகூர்பார்க்கலாம்)

(௨) ஓடம் விட்டுப் பெண்கள் மூமின் ஜனங்களு
மொன்றுபட் டேநடந் தார்கள்—கலைமான்சேர்ந்த
காடு வழியுங் கடந்தார்
வேக முடன்வரக் கண்ட இபுலீசு
மெய்யில் மணங்களும் விம்மிக்—கூவித்
தாக முடனவள் கம்மி
யேக முடன்றெப்பில் ஆலமீ னேயென்று
மேகத் திருச்சினுப் பள்ளி—போக
யோக மவர்களு மள்ளி
தாக மாகவே சேகரத் துடன்
காகம் போலவே மேக மாமதி
பாக மாகவே— (நாகூர்பார்க்கலாம்)

(௩) நத்த றொலிபாதங் கண்டு புகழ்ந்து
நாடினர் தஞ்சை நகரா—மறை
யோதினர் பஞ்ச வுணர்வைப்
பற்றிப் பிடித்தவர் தஞ்சமென் றேயெண்ணி
நித்தமைந் தொகுத்து நேரம்—அதைச்
சத்தியமென் றெண்ணிய கோரம்
கத்தி முனையிற்சண் டைசெய்வ போலே
காட்டி நடத்தினர் வேகம்—இறையருள்

பூட்டி யிருத்தினர் யோகம்
எத்தி யோரிட முத்தி பெற்றிடச்
சத்தி யவளிட நத்தி நாகைமா
பட்ட ணந்தனில்— (நாகூர் பார்க்கலாம்)

(௪) நாகபட் டணம் விட்டுக் கடந்து
நாகூர்ச் சரிகையும் பாரும்—கருணையுள்ள
வாகூ ரொலிபதஞ் சேரும்
பாக முடனே யுயர் தர்கா மனூருவும்
பண்புள்ள தெர்ப்பக் குளங்கள்—அங்கே
போக வருவோர் ஜனங்களை
பேதக மில்லாமல் ஷாகுல் ஹமீதொலி
பிரியமாய் வளர்த்திடு பாலர்—அறையிற்
பாகினை யாயிரு பேரு மிருந்திடும்
பளிங்கிக் கபுர்களைச் சேரும்
பத்திமணங்களும் நித்திய மும்பல
வித்தி விளக்குட னெத்தி மதிலுகள்
சுற்றி யெரிந்திடும். (நாகூர் பார்க்கலாம்)

(௫) சோதி செறிந்திடும் சுற்று மதிளெங்கும்
பற்றி விளக்குக ளேற்றி—மிகவுயர்
வெற்றி முழங்குது நேத்தி
சாதி பிரிவாகச் சுற்றுக் கடைகளிற்
சரக்கு வினோதமாய்த் தூக்கி—அங்கே
யோதி வருவோரை நோக்கி
வீதி முழுமையும் பத்தி சொருகலில்
மெய்யினில் நன்மணம் வீசி—குருன்மறை
யோதினோர் சேர்ந்தங்கு யாசீன்
ஹாஜி குலங்களும் பாசமு ளார்களும்
யாசினை யோதியே பேசிடு வோர்களும்
கூசிடு வார்பலர். (நாகூர் பார்க்கலாம்)

(௬) ஓதி மிகமிக வந்த ஜனங்களும்
உள்ளே நுழையும் போதங்கே—கற்பதிக
நீதி யறிந்தோர் கொங்கை
வேதிய ரொலிகளு மூமினுங் காமிலும்
வேதாந்த மஸ்தான்கள் நிற்க—அவர்களைக்
காதி றொலி யவர் பார்க்க
ஆதி கிருபையால் நின்ற ஜனங்களும்
ஓதி மிகமனம் வாடிக் காதிறொலி
பாதமே கதியென நாடி
ஆதி யாலருள் சோதி பெற்றவர்

கோதி லாதவர் தேச மெங்கணும்
வாச மாகவே. (நாகூர் பார்க்கலாம்)

(எ) மெய்யில் மணங்களும் மெத்த வுருகிடப்
பைய நடந்துள்ளே சென்றார்—கிருபைக்
கையை யெடுத்துமுன் னின்றார்
நெய்யின் விளக்குகள் குத்து விளக்குகள்
முத்துச் சரங்களுஞ் சேர்த்து—அங்கங்கே
யுற்ற முசாபிர்கள் பார்த்துக்
கையை யெடுத்தங்கு நின்றிடு மூமினோர்
காதி றுலிகபுர் முன்பில் நின்று—கொண்டு
பையலைக் காத்திடு மென்று
தைய லானவர் துய்ய வேதமும்
பைய வோதியே மெய்யெ லாநிறை
செய்யி தொலி யுறும். (நாகூர் பார்க்கலாம்)

(அ) பாத மலரையே வந்து பணிந்தோர்க்கும்
படைத்தோ னிடத்தில்மன் றாடி—துஆவஃ
தோதி யேறகு மானுற வாடி
ஆத மவர்மக்கள் மூமின் முசிலிமும்
அன்புள்ள ஸாலிஹா னோர்க்கும்—இறையருள்
தாகமு டன்கேட்க வந்தவர் யார்க்கும்
பேதக மில்லாமற் றந்தருள் வானென்று
காதலுடனவர் சென்றார்—நித்தியம்
பாத மலரையுங் கண்டார்
ஆதி நாயகன் வேத மோதிடு
போத மீறிய நீத ரானவர்
காதி றுலியுறும். (நாகூர் பார்க்கலாம்)

முற்றிற்று.

விளம்பரம்.

இந்தப் புத்தகத்தில் முகியித்தீ னாண்டகை சதக முதலிய சில மஹரிபாப் பாடல்களு மச்சிட் டிருக்கின்றமையால், மூமின், முசிலிமாகிய எம துடற்பிறந்தான் மார்கள், வெள்ளிக்கிழமை, திங்கட்கிழமையிரவுகளிற் பத்து மணிக்குமேல், உலுவுடனே ஹாஜத்து இரண்டு றக்குஆத்துத் தொழுதுகொண்டு, புகறிட் டிருந்து படித்துவந்தால், ஜின்ஷெயித் தான்களின் துன்பங்கள் நீங்குவதுடனே புத்திர பவுத்திரசம்பத்துகளும், தனகனக வாகனங்களும் பெருகி வாழ்ந்திருப்பார்கள்," இதிற்சந்தேகந் தோற்றுமாகிற் படித்துப் பார்த் தறிந்துகொள்க அவர்களையாம் விரும்புகின்றனம், அல்லாகுத் தஆலா எல்லாருக்கும் நற்கிருபை செய்வானாக ஆமீன் யாறப்பல் ஆலமீன்.